**சின்ன வெங்காயத்திற்கான விலை முன்னறிவிப்பு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, சின்ன வெங்காயத்திற்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய பகுதிகளில் அதிகளவு சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. சின்ன வெங்காயம் பயிரிடுவதிலும், வியாபாரம் செய்வதிலும் தமிழகத்திற்கு கர்நாடகா முக்கிய போட்டியாளராக திகழ்கிறது. தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் தோட்டப்பயிர்த் துறையின் அறிக்கையின் படி, 2020-21 ஆண்டில், தமிழ்நாட்டில் சின்ன வெங்காயம் 0.51 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 3.57 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், மொத்த வெங்காய பரப்பளவில் 80 சதவீதத்திற்கும் மேல் சின்ன வெங்காயமும் மீதம் பெல்லாரி வெங்காயமும் பயிரிடப்படுகின்றன. திண்டுக்கல், திருப்பூர், பெரம்பலூர், திருச்சி மற்றும் நாமக்கல், ஆகிய மாவட்டங்களில் சின்ன வெங்காயத்தை அதிகளவு பயிரிடுகின்றனர்.

கர்நாடகா மற்றும் ஆந்திர பிரதேசம் போன்ற அண்டை மாநிலங்களிலிருந்து வரும் அதிக வெங்காய வரத்து காரணமாக தமிழகத்தில் சின்ன வெங்காயத்தின் விலை தொடர்ந்து அழுத்தத்தில் உள்ளது. மேலும், தமிழ்நாட்டில் சின்ன வெங்காயத்தின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் போதுமான அளவு இருப்பு இருப்பதன் காரணமாக வரவிருக்கும் மாதங்களில் விநியோக நிலைமை தேவைக்கும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்சூழல் ஆகஸ்ட்'2022 வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விலை முன்னறிவிப்புத் திட்டமானது, கடந்த 23 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயம் விலையை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், வரும் ஆகஸ்ட் மாத இறுதி வரை தரமான சின்ன வெங்காயம் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 20 முதல் 22 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், சந்தை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

அ.) உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி -0422-2431405

ஆ) இயக்குனர் மற்றும் முனை அதிகாரி
தமிழ்நாடு பாசன விவசாய நவீனமாயமாக்கல் திட்டம்
நீர் தொழிநுட்ப மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி -0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
காய்கறிப் பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611374

## Price Forecast for Small Onion

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for Small Onion.

Small onion is mainly grown in the states of Tamil Nadu, Karnataka, Andhra Pradesh and Odissa. Karnataka is the major competitor for Tamil Nadu in cultivation and trade of small onion. According to the Department of Horticulture and Plantation Crop, Tamil Nadu produced 3.57 lakh tonnes of small onion in 0.51 lakh ha during 2020-21. In Tamil Nadu, small onion is cultivated more than 80 per cent of the total onion area and remaining area is under bellary onion. Major small onion producing districts in Tamil Nadu are Dindigul, Tiruppur, Perambalur, Trichy and Namakkal.

Small onion prices in Tamil Nadu are set to remain under pressure due to more arrivals from neighbouring states like Karnataka and Andhra Pradesh. Due to increased area, production and sufficient availability/stored onion in Tamil Nadu, the supply situation is expected to be comfortable in coming months. The availability of small onion is expected to be excess in coming months. The trend is likely to continue till the end August, 2022.

The Price Forecasting Scheme has analyzed the past 23 year historical prices that prevailed in Dindigul Market for small onion. As per the results of the time series analysis, the farm gate prices of good quality small onion till end of August would be around Rs. **20-22** /kg and subsequent price fluctuation would be subjected to the arrivals from Karnataka. Hence, the farmers are advised to take selling decision accordingly.

***For Marketing information details contact:***

*i).Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

*ii).The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-6611278*

***For Technical Details please contact:***

*Professor and Head*
*Department of Vegetable crops*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore-641003*
*Phone: 0422-6611374*

.